**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**MC.No .01/2025**

மனுதாரர் தரப்பு **1 வது சாட்சி ரெத்தினலெட்சுமி** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வீரமணிகண்டன், இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

நாள் :27.11.2025

மா.சா.: – 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெத்தினலெட்சுமி | வயது | : | 48 |
| தந்தை/ கணவர் பெயர் | : | இராஜகுரு | தாலுகா | : | இலுப்பூர் |
| கிராமம் | : | கீழக்குறிச்சி | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |

முதல்விசாரணை

நான் இந்த வழக்கில் 1– ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எங்களது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 18.03.2016 ம் தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் **ம.த.சா.ஆ.1 ஆகவும்,**
2. எனது ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ. 2 ஆகவும்,**
3. மைனர் 2 ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ. 3 ஆகவும்,**
4. மாண்பமை புதுக்கோட்டை குடும்ப நல நீதிமன்றம் H.M.O.P. No: 29/2022 என்ற வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ. 4 ஆகவும்,**
5. மாண்பமை புதுக்கோட்டை குடும்ப நல நீதிமன்றம் H.M.O.P. No: 29/2022 என்ற வழக்கின் உத்தரவு சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.